# வளர்நிலை- 4

## என் வீடு

என்னுடைய வீடு மார்க்கம் நகரத்தில், வன்னி வீதியில் இருக்கிறது. என் வீடு செங்கற்களால் கட்டப்பட்ட வீடு, என்னுடைய வீட்டில் என் தந்தையும் தாயும் இருக்கிறார்கள். எனக்குத் தம்பியர் இருவரும், தங்கை ஒருத்தியும் இருக்கிறார்கள். நான்தான் மூத்தவன். என் தாத்தாவும் பாட்டியும் எங்களுடன் இருக்கிறார்கள்.

நாங்கள் ஏதாவது தவறு செய்தால் தந்தை தண்டிக்க முற்படுவார். அப்பொழுது தாய் வந்து தடுத்து, '**சின்னக் குழந்தைகள், விட்டுவிடுங்கள்**; **தெரியாது செய்திருப்பார்கள்**' என்பார். சில சமயம், எங்கள் தாய் எங்களைத் தண்டிக்க வரும்பொழுது தந்தை தடுத்துவிடுவார். இந்த நிகழ்ச்சி நடக்கும் பொழுது நாம் படித்த பாடத்தில் வந்துள்ள, "**தடித்த ஓர்மகனைத் தந்தை அடித்தால் தாய் அணைப்பார்**" என்னும் வள்ளலார் பாடல்தான் நினவுக்கு வரும்.

நாங்கள் உண்ணும் பொழுது, அனைவரும் சேர்ந்து உட்கார்ந்து உண்போம்.

என் தாத்தா, என்னையும் தம்பி தங்கையரையும் அருகில் உள்ள பூங்காவிற்கு அழைத்துச் செல்வார் . அங்குள்ள பூமரங்களைப் பற்றியும், வளர்ந்து உயர்ந்து நிற்கும் மரங்கள் பற்றியும், அவற்றில் வாழும் பறவைகளைப் பற்றியும் கூறுவார். இத்தகைய பூங்காக்கள் நகரின் மத்தியில் இருப்பதால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி விளக்கிச் சொல்லுவார்.

நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகவே இருப்போம். சிறுசிறு பூசல் வந்தாலும் அதனை உடனே மறந்துவிடுவோம்.

இப்படி எங்கள் வீடு அனைவரும் பார்த்து மகிழும் வீடாய், கூட்டுக் குடும்பத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் வீடாய் உள்ளது.

நன்றி,
வணக்கம்